www.agaram.lk



கல்வியமைச்சு
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - 2019
General Certificate of Education (Ord.Level) Examination - 2019
உதவிக் கருத்தரங்கிற்கான மாதிரி வினாப்பத்திரம்

தமிழ் மொழியும் இலக்கியமும் I, II மூன்று மணித்தியாலம்
Tamil Language and Literature I, II Three hours

தமிழ் மொழியும் இலக்கியமும் I

கவனிக்க :
i. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. வினாத்தாள் I இற்குரிய புள்ளிகள் 40 ஆகும்.
ii. 1 தொடக்கம் 40 வரையுள்ள வினா ஒவ்வொன்றிலும் (1),(2),(3),(4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
iii. உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (x) இடுக.
iv. அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து பின்பற்றுக.

- தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1. 'கணக்காயர் இல்லாத ஊரும்' - இங்கு கணக்காயர் என்பது
(1) கணக்காளர் (2) ஆசிரியர் (3) வணிகர் (4) மூத்தோர்

2. 'பூத்த ஜோதி வதனம் திரும்புமேல்...' - இங்கு வதனம் என்பது
(2) சுடர் (2) அணங்கு (3) முகம் (4) மலர்

3. 'பிரிவின் கண் பீழை தருவது ஒன்றில்' - பீழை என்பதன் எதிர்க்கருத்து
(1) துன்பம் (2) கவலை (3) மயக்கம் (4) இன்பம்

4. 'அறியார் புல்லர் நல்லோரை....' - புல்லர் என்பதன் எதிர்க்கருத்து
(1) அறிவுடையார் (2) அறிவிலர் (3) முதியோர் (4) பகைவர்

5. 'போதம் மூன்றும் நலம் செயும் நாடு...' போதம் என்பதனுள் அடங்காதது எது?
(1) பிறப்பு (2) இறப்பு (3) தாழ்வு (4) வாழ்வு

- பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

6. "டைரக்டரி உண்டாக்கி அதிலே எங்கள் வேலைகளை சேமித்து வைத்துக்கொள்ள வேண்டும்" - டைரக்டரி (Directory) என்பதற்கு நிகரான தமிழ்ச்சொல்
(1) குறிப்பேடு (2) சிற்றேடு (3) ஒலிப்பதிவு (4) விபரப்புத்தகம்

7. அவரிடம் அறிவு தேஜஸ், சட்டெனத் தெரியும். இங்கு தேஜஸ் என்பது
(1) ஒளி (2) அழகு (3) முதிர்வு (4) தேகம்

8. பொருத்தமற்ற சொற்களின் இணைப்பு
(1) உடு - திரள் (2) வைக்கோல் - கற்றை
(3) மலர் - செண்டு (4) சுருட்டு - சிப்பம்

9. எடுத்த எடுப்பில் கவிபாடும் ஆற்றல் மிக்கவன்
(1) வரகவி (2) ஆசுகவி (3) விகடகவி (4) மதுரகவி

10. தேர் செலுத்துபவன் பாகன் என்பது போல விமானம் செலுத்துவோர்
(1) வலவன் (2) மீகாமன் (3) சாரதி (4) மாலுமி

[பக்.2 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



11. 'கண்ணோடுதல்' எனும் மரபுத் தொடரின் கருத்து

(1) கண்விழித்தல் (2) கண்காணித்தல் (3) இரங்குதல் (4) உற்றுநோக்கல்

12. கும்பகர்ணன் இராவணனுக்கு உரைத்த அறிவுரைகள் விழலுக்கு இறைத்த நீரானது. இங்கு 'விழலுக்கு இறைத்தல்' என்பது

(1) தெளிவடைதல் (2) வீணாகப்போதல் (3) உய்வடைதல் (4) பயன்படுதல்

13. மேகம், ஆபரணம், வலிமை, அழகு என்னும் பலபொருள் தரும் சொல்

(1) நகை (2) எழில் (3) ஆழி (4) மஞ்சு

14. பிறிற்றோ கட்சியினர் மெல்ல மெல்ல கீழே இறங்கித் தரைமட்டத்திற்கு வந்துவிட்டார்கள். இவ் வாக்கியத்தில் மெல்ல மெல்ல என்பது

(1) இரட்டைக்கிளவி (2) அடுக்குத்தொடர்
(3) அடுக்கிடுக்குத்தொடர் (4) இணைமொழித்தொடர்

15. உறவினர்களின் சிறுகுற்றங்களைப் பொருட்படுத்தக்கூடாது என்னும் பொருளை உணர்த்தும் பழமொழி

(1) ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும் (2) குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்
(3) குற்றம் பார்க்கில் சுற்றமில்லை (4) இனம் இனத்தையே சேரும்

16. எறும்பூரக் கற்குழியும் என்னும் பழமொழிக்கு நிகரானது

(1) அச்சாணி இல்லா தேர் முச்சாணும்ஓடாது (2) அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும்
(3) எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம் (4) வல்லவனுக்கு புல்லுமாயுதம்

17. இணைபிரியாமை என்பதை உணர்த்தும் உவமைத்தொடர்

(1) அன்றில் பறவை போல (2) ஓடும் புளியம்பழமும் போல
(3) அற்ற குளத்தில் அறுநீர்ப்பறவை போல (4) தாமரை இலைத் தண்ணீர் போல

18. (அ) மழை பொழிந்தது. (ஆ) கிணறு நிறையவில்லை.

மேற்படி வாக்கியங்களை இணைப்பதற்கு மிகப்பொருத்தமான இணைப்பிடைச்சொல்

(1) ஆகவே (2) ஆயினும் (3) அத்துடன் (4) எனவே

19. துண்ணெனத் துடித்தது நெஞ்சம் · இங்கு துண்ணென என்னும் ஒலிக்குறிப்புச் சொல் உணர்த்தும் பொருள்.

(1) அச்சம் (2) கவலை (3) கோபம் (4) மகிழ்ச்சி

20. மாணவர்கள் தரப்பட்ட அட்டவணையைப் பூர்த்தி செய்தனர். இங்கு 'அட்டவணை' என்பது

(1) ஒல்லாந்து மொழிச்சொல் (2) மராட்டி மொழிச்சொல்
(3) பிரான்சிய மொழிச்சொல் (4) உருது மொழிச்சொல்

• பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்க.

21. பகாப்பதமாக அமையும் சொல்

(1) ஓடல் (2) ஓட்டம் (3) கவிஞன் (4) அரவம்

22. உடனிலை மெய்மயக்கமாகவும் வேற்றுநிலை மெய்மயக்கமாகவும் வரும் சொல்.

(1) கண்ணீர் (2) தேர்க்கால் (3) பந்து (4) மஞ்சள்

23. பின்வருவனவற்றுள் வினையடை

(1) வேகமான (2) உயரமான (3) வேகமாக (4) சிரித்த

[பக்.3 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



24. கெடுதல் விகாரப்புணர்ச்சியும் தோன்றல் விகாரப்புணர்ச்சியும் இடம்பெற்ற சொல்

(1) வட்டப்பலகை (2) பலாப்பழம் (3) கடற்கரை (4) கடலுண்டு

25. பின்வருவனவற்றுள் தொகைநிலைச் தொடர் அல்லாதது

(1) எறிகணை (2) கயல்விழி (3) வட்டநிலவு (4) கயலினிது

26. 'இரண்டு நாட்களுக்கு போதும்' இங்கு 'கு' உருபு உணர்த்தும் பொருள்.

(1) காலக்குறிப்பு (2) எல்லைப்பொருள்
(3) அனுபவப்பேறு (4) வினையடை ஆக்கம்

27. 'எந்தையும் உடையேம்...' இங்கு உடையேம் என்பது

(1) தன்மை ஒருமை வினைமுற்று (2) தன்மை பன்மை வினைமுற்று
(3) முன்னிலை பன்மை வினைமுற்று (4) படர்க்கை பன்மை வினைமுற்று

28. அகராதி ஒழுங்கில் அமைந்த சொற்றொகுதி

(1) கலை, சிலை, குலை, மலை (2) குடை, தடை, படை, வடை
(3) கரை, சரை, வரை, இரை (4) அறை, நிறை, சிறை, மறை

• பொருத்தமற்ற உதாரணம் இடம்பெற்றுள்ள சொற்றொகுதியைத் தெரிவு செய்க.

29. (1) ஏவல் வினை : வா, ஓடுங்கள், படியுங்கள்
(2) தன்வினை : சாப்பிட்டேன், மேய்ந்தது, கற்றேன்
(3) வினையெச்சம் : படித்த, பறந்து, பாடி
(4) குறிப்பு வினை : கரியன், செல்வன், ஆதிரையன்

30. (1) இயல்பு புணர்ச்சி : தேனருவி, மண்வாசனை, மண்ணறிப்பு
(2) தோன்றல் : பூங்கொடி, பட்டுப்பூச்சி, பலாக்காய்
(3) கெடுதல் : மரவேர், தாகசாந்தி, வட்டமேசை
(4) திரிதல் : அஃறிணை, கற்சிலை, வாட்போர்

• புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப்பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

31. அரசியல் திட்ட மறுசீரமைப்பு தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் .................... பாராளுமன்றத்தில் பரிசீலிக்கப்பட்டது.

(1) உறுதியுரை (2) மதிப்புரை (3) விதப்புரை (4) அணிந்துரை

32. பெண்கள் உரிமைகள் பாதுகாக்கப்படும் என அரசியல் யாப்பில் .................... அளிக்கப்பட்டுள்ளது.

(1) உறுப்புரை (2) நிபந்தனை (3) உத்தரவாதம் (4) பிரகடனம்

33. எனது நண்பன் .................... வாங்கிய கடனை இன்னும் திருப்பித் தரவில்லை.

(1) கைம்மாற்றாக (2) கைமாத்தாக (3) கைமாற்றாக (4) கைமாறாக

34. இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கத்தினால் .................... வழங்கப்பட்டது.

(1) மானியம் (2) ஓய்வூதியம் (3) காப்பீடு (4) நிவாரணம்

35. அறிவியற்தேவைகளை நிறைவு செய்வதற்கு கலைச் சொற்களை உருவாக்கும் பணி....................

(1) இன்றியமையாதனவாகும் (2) இன்றியமைந்தமையாகும்
(3) இன்றியமையாததாகும் (4) இன்றியமைந்ததாகும்

[பக்.4 ஐப் பார்க்க.

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



- பின்வரும் வாக்கியத்தின் முன்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் சொல்லைத் தெரிவுசெய்க.

36. நாம் நேர்மையாக நடந்து கொள்வோமாயின் எவ்வித துன்பங்களும்

(1) எம்மை அணுகமாட்டாது (2) எம்மை அணுகா
(3) எம்மை அணுகாது (4) எம்மை அணுகும்

- கீழே தரப்பட்டுள்ள பாடலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.

அள்ளக் குறையா தினிதூறும்
வெந்நீர்ச் செல்வ மதையருளி
மெள்ளச் சுரந்து வருவதென்னே
விளம்பாய் கன்னி யாய்த் திருவே
மெள்ளச் சுரந்து வருவதெல்லாம்
விரும்பி யுலகோர் மனத்தளவே
கொள்ளச் சுரக்கும் கல்வியென
யானும் சுரக்குங் குணங்கண்டீர்

37. இப்பாடல் உணர்த்தும் விடயம்

(1) உலகோர் மனநிலை (2) கன்னியா வெந்நீரூற்று
(3) கல்விச்செல்வம் (4) குணக்குன்று

38. இப்பாடலில் வெந்நீர்ச்செல்வம் என்பது

(1) தற்குறிப்பேற்ற அணி (2) உருவக அணி
(3) உவமை அணி (4) உயர்வு நவிற்சி அணி

39. இப்பாடலில் 'விளம்பாய்' என்னும் சொல் குறித்து நிற்பது

(1) வாழ்த்துவாய் (2) புகழ்வாய் (3) சொல்வாய் (4) செய்வாய்

- கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றி காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்கேற்ற பொருத்தமான வைப்புமுறையைத் தெரிவுசெய்க.

40. அ. பேச்சு ஒலி நிலையில் கேட்பவரைச் சென்றடைகிறது.
ஆ. இச்செய்திப் பரிமாற்றம் மொழியின் பேச்சு, எழுத்து என இருநிலைகளில் இடம்பெறுகின்றது.
இ. மனிதன் தன் எண்ணங்களைப் பிறரோடு பகிர்ந்துகொள்ள பயன்படும் அரியகருவி மொழியாகும்.
ஈ. எழுத்து, வரிவடிவில் தன் செயலை ஈடேற்றுகிறது.
உ. இது செய்திபரிமாற்றத்திற்கான தொடர்பை ஏற்படுத்தும் கருவியாகவும் அமைகிறது.

(1) இ, உ, ஆ, அ, ஈ (2) இ, உ, ஈ, அ, ஆ
(3) இ, உ, அ, ஆ, ஈ (4) இ, ஈ, உ, ஆ, அ

**

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



**கல்வியமைச்சு**
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை – 2019**
**General Certificate of Education (Ord.Level) Examination - 2019**
**உதவிக் கருத்தரங்கிற்கான மாதிரி வினாப்பத்திரம்**

**தமிழ் மொழியும் இலக்கியமும் I, II**
**Tamil Language and Literature I, II**

## தமிழ் மொழியும் இலக்கியமும் II

**கவனிக்க :**
i. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கைப்பெழுத்தில் எழுதுக.
ii. இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

I. சுருக்கமான விடை எழுதுக.

i. பின்வரும் தொடரைச் சந்தி பிரித்து எழுதுக.

"பசுமை குளிரிளஞ் சூடும்
பொறுமையாய் மெல்லெனப் பூசி"

ii. "என்ரை பெரியண்ணன் இண்டைக்குப் பின்னேரம் வந்திடுவார்" என்ற பேச்சு வழக்குத் தொடரை எழுத்து வழக்காக மாற்றி எழுதுக.

iii. பின்வரும் வாக்கியத்தை பொருத்தமான நிறுத்தற் குறியீடுகளை இட்டு அதனை மீண்டும் எழுதுக.

ஏன் ஐயா இடையில் எழும்புறீங்கள் இருங்கோ எல்லாரையும் டொக்டர் ஐயா பார்ப்பார்

iv. "எனக்கு குடிக்க கொஞ்சம் தண்ணீர் தாருங்கள்" இவ்வாக்கியத்தின் எழுவாய், பயனிலை என்பவற்றை இனங்கண்டு எழுதுக.

v. நாசா செவ்வாய்க்கிரகத்தை ஆய்வு செய்தது. இதனை செயப்பாட்டுவினை வாக்கியமாக மாற்றி எழுதுக.

vi. தொழின்முறைக்கடிதம் ஒன்றில் காணப்படும் பின்வரும் விடயங்களை ஒழுங்குபடுத்துக.

முகவரி, விளிப்பு, உள்முகவரி, தலைப்பு, முடிப்பு, ஒப்பம், நன்றி, விடயம்

vii. (அ) டெங்குநோய் தொடர்பான கூட்டத்திற்கு குடும்பத்தின் தலைவர் சமுகமளிக்க வேண்டும்.
(ஆ) டெங்குநோய் தொடர்பான விழிப்புணர்வுக்கூட்டம் பாரதி சனசமுக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விரு வாக்கியங்களில் அறிவித்தலாக அமைந்த வாக்கியம் எது?
அறிவுறுத்தலாக அமைந்த வாக்கியம் எது?

viii. சத்தியத்தின் வழியில் நடப்பதால் நன்மை உண்டாகும் என்று காந்தியடிகள் கூறினார். இவ்வாக்கியத்திலுள்ள தலைமைத்தொடர், சார்புத்தொடர் என்பவற்றை எழுதுக.

ix. 'கோட்டைச் சுவர்கள் வானத்தை தொடுமளவிற்கு உயர்ந்து நின்றன.' இதில் பயின்றுள்ள அணி யாது?

x. 'உள்ளங்கை நெல்லிக்கனி போல' - இத்தொடரில் இலக்கணப்போலியாக அமைந்த சொல் யாது?

(20 புள்ளிகள்)

[பக்.2 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



2. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடைபெழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்கு பொருத்தமான தலைப்பு இடுக.

i. இன்றைய சூழ்நிலையில் உயிரினச்சூழல் மனிதன் வாழ்வதற்கு இயைபற்றதாகி விட்டது. மழைவீழ்ச்சி குறைவடைதல், புவி வெப்பமடைதல், உயிரினச்சூழல் பாதிப்படைதல், காட்டு விலங்குகள் இடம்பெயர்தல் முதலான நிகழ்வுகள் அதிகரித்து வருகின்றன. இவற்றை குறைத்துக்கொள்வதற்கு மரங்களை நாட்டுவது அவசியம் என்னும் நோக்கில் அமைந்த ஒரு விளக்கக் கட்டுரை.

ii. 'தண்டனைகள் வழங்கப்படுவது குற்றங்களை குறைப்பதற்கே' நாட்டில் ஏற்படுகின்ற குற்றங்களை தடுப்பதற்கு மரணதண்டனை நிறைவேற்றப்படல் வேண்டும் என்ற கருத்துநிலையில் உள்ள ஒருவருக்கும், உயிர்களை அழிப்பதற்கு எவருக்கும் உரிமை கிடையாது; மரணதண்டனை நிறைவேற்ற வேண்டியதில்லை என்ற மனநிலையில் உள்ள இன்னொருவருக்கும் இடையில் இடம்பெறும் ஓர் உரையாடல்

iii. கற்றல் என்பது அறிவு, திறன் முதலியவற்றை விருத்திசெய்யும் செயற்பாடு. கல்வி என்பது அறிவைப் பெறுவது மாத்திரமன்றி, சிறந்த ஒழுக்கப் பண்புகளை வளர்ப்பதாக, ஆளுமைப் பண்புகளை மேம்படுத்துவதாக, தனிமனித திறன்களை விருத்தி செய்வதாக அமையவேண்டும். அப்போதுதான் கல்விஇலக்கு முழுமைபெறும் என்பதை அடிப்படையாகக் கொண்ட ஒரு மேடைப் பேச்சு.

iv. கல்வியிலும், பழக்கவழக்கங்களிலும் சிறப்பாக இருந்தவன்தான் எழிலன். ஆனால் இடைநடுவில் ஏற்பட்ட தீய நண்பர்களின் சேர்க்கை, பழக்கவழக்கங்கள் முதலியன அவனைத் தலைகீழாக மாற்றியிருந்தன. இந்த நிலையில்தான் புதிதாக வந்த முகிலனுடன் பழக்கம் ஏற்பட்டது. இன்று எழிலன் எல்லோராலும் புகழப்படுகின்ற ஒருவனாக காணப்படுகின்றான். முகிலனுடன் எழிலன் கொண்ட நட்பை கருப்பொருளாக கொண்டமைந்த ஒரு சிறுகதை.

(25 புள்ளிகள்)

3. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 - 45 சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையை குறிப்பிடுக.)

அறிவென்பது பொருள் சார்ந்த கோட்பாடு அல்லது நடைமுறை புரிதலைக் குறிக்கும். அதாவது செயலாக்கத்திறனறிவு பற்றிய ஆய்வை ஒளிர்வுக் கோட்பாடு என்று அழைப்பர். அறிவை நியாயப்படுத்தப்பட்ட உண்மையான நம்பிக்கை என்றும் வரையறுப்பர். அறிவு கல்வியினால், கேள்வியினால் வருவதாக இருக்கலாம். கல்வி, கேள்வி ஆகியவற்றில் கிடைக்கும் அறிவே உண்மையான அறிவென வள்ளுவர் குறிப்பிடுகின்றார். அறிவைப் பெற்றுக்கொள்ள ஒருவன் ஓயாது முயல வேண்டும். அறிவைப் புலக்காட்சியின் மூலமாகவும் கருத்துக்களை பரிமாறுவதன் மூலமாகவும் பகுத்தறிவதன் மூலமாகவும் ஆசிரியரிடம் சென்று கல்வி கற்பதன் ஊடாகவும் சுயமாகக் கற்பதன் மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

அறிஞர்களின் உரைகளைக் கேட்பதனூடாகவும் அறிவைப் பெற்றுக்கொள்ள முடியும். இத்தகைய அறிவு கேள்வியறிவு எனப்படும். ஔவையார், வள்ளுவர், கம்பர் முதலிய அறிஞர்கள் தமது நூல்களில் அறிவு குறித்தான விடயங்களைக் கூறியிருக்கின்றனர். அந்நூல்களைக் கற்பதனூடாக அறிவைப் பெற்றுக்கொள்ள முடியும். அறிவைத் தருகின்ற நூல்கள் தமிழில் ஏராளமாகக் காணப்படுகின்றன. ஆசிரியரின் துணையோடு இவற்றைக் கற்றல் வேண்டும். நூல்களை ஒருமுறை கற்பதனால் மட்டுமே அறிவை அடைந்து விட முடியாது. அவற்றை வாழ்க்கையில் பயன்படுத்தவும் தெரிந்து வைத்திருக்க வேண்டும். "ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது" என வழங்குவர். இத்தகைய கூற்றுக்கள் ஒருவன் அறிவைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதோடு அவற்றைப் பயன்படுத்தவும் தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்பதையும் உணர்த்தி நிற்கின்றன.

(10 புள்ளிகள்)

[பக்.3 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk

www.agaram.lk



4. பின்வரும் உரைநடைப் பகுதியை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

இலக்கியம் என்பது படைப்புக்கலை. மனித இனத்தின் வாழ்வியல் அனுபவங்களைக் கலை நயத்தோடு எடுத்துரைக்கும் இலக்கியம், வரலாற்றின் இயங்கு கருவியாகவும் காலத்தின் கண்ணாடியாகவும் அமைகிறது. "இலக்கியம் என்னும் சொல் வடமொழிச் சொல்லின் திரிபாகும். இது நோக்கம், குறிக்கோள் முதலான பொருள்களை உடையது. இதனாலேயே இலக்கு+ இயம்= இலக்கியம் எனக்கொண்டு நோக்கினை இயம்புவது இலக்கியமெனக்கூறி பொருள் உரைப்பர். ஞா.தேவநேயப்பாவாணர் சிறந்த வாழ்க்கைக் குறிக்கோளான அறத்தை எடுத்துக்காட்டுவது இலக்கியம் என்றும் சிறந்த மொழிக்குறிக்கோளான அமைப்பை எடுத்துக் கூறுவது இலக்கணம் எனவும் குறிப்பிடுவார். இலக்கணத்திற்கு அணங்கம் என்றும் இலக்கியத்திற்கு அணங்கியம் என்றும் பெயருமுண்டு. இந்த வரையறையின்கீழ் இலக்கியத்தை இன்பியல் இலக்கியம், அறிவியல் இலக்கியம் என இரு வகைகளாகப் பிரிக்கலாம். இன்பியல் இலக்கியம் "கற்போர் உள்ளத்துக்கு இன்பம் தரும் நூல்கள்". அறிவியல் இலக்கியம் கற்போருக்கு அறிவை முதன்மையாகத் தரும் நூல்கள். தமிழ் இலக்கியங்களில் பெரும்பாலானவை இன்பியல் இலக்கியங்களே. இது இலக்கிய வளர்ச்சி அரசர்களையும் குறுநில மன்னர்களையும் சுற்றி வந்ததால் ஏற்பட்டிருக்கலாம். அதன் விளைவாக இலக்கியம் என்ற சொல் தமிழில் இன்பியல் இலக்கியத்தையே பெரும்பாலும் குறித்து நிற்கின்றது. சிறுகதை, நாவல், கவிதை, நாடகம் ஆகிய எழுத்துக்கலை வடிவங்களே இன்று தமிழிலக்கியம் என பொதுவாகக் கருதப்படுகின்றது.

(i) இலக்கியம் என்ற சொல் குறிக்கும் பொருள்கள் யாவை?

(ii) இலக்கணம் என்ற சொல்லுக்கு ஞா.தேவநேயப்பாவாணர் குறிப்பிடும் விளக்கம் யாது?

(iii) "தமிழ் மொழியில் இன்பியல் இலக்கியங்களே அதிகளவில் உள்ளன" என்பதற்கு கட்டுரையாசிரியர் கூறும் காரணம் யாது?

(iv) தற்காலத்தில் தமிழ் இலக்கியங்கள் என கருதப்படுபவை எவை?

(v) பின்வருவனவற்றுள் பொருத்தமற்ற கூற்றைத் தெரிவுசெய்க

(அ) கற்போர் உள்ளத்துக்கு இன்பம் தரும் இலக்கியம் அறிவியல் இலக்கியம்

(ஆ) கற்போர் உள்ளத்துக்கு இன்பம் தரும் இலக்கியம் இன்பியல் இலக்கியம்

(இ) கற்போர் உள்ளத்துக்கு அறிவை தரும் இலக்கியம் அறிவியல் இலக்கியம்

(ஈ) இலக்கியம் காலத்தின் கண்ணாடியாகவும் வரலாற்றின் இயங்கு கருவியாகவும் அமைகிறது.

(10 புள்ளிகள்)

4. நாட்டின் பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தி என்பன இளைஞர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. அவர்களிடத்தே காணப்படுகின்ற குழு மோதல்கள், ஒற்றுமையின்மை என்பன அவர்களை தவறான வழிகளுக்கு இட்டுச்செல்கின்றன. இளைஞர்களை நல்வழிப்படுத்துவதையும் அவர்களின் சக்தியை வலுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு உமது கிராமத்தில் இளைஞர் முன்னேற்ற கழகமொன்றை அமைப்பதற்கு அனுமதி தருமாறு கோரி பிரதேச செயலாளருக்கு 100 சொற்களில் ஒரு கடிதம் எழுதுக.

அல்லது

உமது பாடசாலையில் அண்மையில் நடைபெற்று முடிந்த முத்தமிழ் விழாவின் செயலாளராக உம்மைக் கருதிக் கொண்டு முத்தமிழ் விழா தொடர்பான அறிக்கையொன்றினை 100 சொற்களில் அமையுமாறு எழுதுக.

(15 புள்ளிகள்)

***

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



கல்வியமைச்சு
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை – 2019
General Certificate of Education (Ord.Level) Examination - 2019
உதவிக் கருத்தரங்கிற்கான மாதிரி வினாப்பத்திரம்

தமிழ் மொழியும் இலக்கியமும் III — இரண்டு மணித்தியாலம்
Tamil Language and Literature III — Two hours

## தமிழ் மொழியும் இலக்கியமும் III

**கவனிக்க** :
- அறிவுறுத்தலுக்கேற்ப ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- 1,2,3,4 ஆகிய வினாக்களுக்கும் 5,6,7 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.
- இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

1. சுருக்கமான விடை தருக.

(i) "...தெள்ளிய வாலின் சிறுபழத் தொரு விதை
தெண்ணீர் கயத்துட் சிறுமீன் சினையினும்...."

(அ) கயம் என்பதன் பொருள் யாது?
(ஆ) சிறுமீன் சினையினும் நுண்ணியது எது?

(ii) "...இந்த இருவரில் தக்கவர் இன்னாரென்று வாதிப்பதற்குத்தான் அந்தப் பாரிய கூட்டம்
விசுவநாதப்பிள்ளையின் தலைமையில் நடக்கின்றது...."

(அ) இங்கு இருவர் எனக் குறிப்பிடப்படுவோர் யாவர்?
(ஆ) தக்கவர் என்பதன் எதிர்ப்பொருள் யாது?

(iii) "கழியும் பிழைபொருட் டள்ளி நன்னூலாங் கடலிலுண்டு
வழியும் பொதிகை வரையினிற் கால் கொண்டு...."

(அ) இங்கு உண்ணப்படுபவை எவை?
(ஆ) வரை, கால்கொண்டு என்பவற்றுக்கு பொருள் எழுதுக.

(iv) "...யானை ஆதிமூலத்தைக் கூப்பிட்டதுபோல ஓலமிடுவாள் என் மனைவி"

(அ) இங்கு மனைவி எனக் குறிப்பிடப்படுபவரின் பெயர் என்ன?
(ஆ) இதில் இடம்பெற்றுள்ள அணி யாது?

(v) "......கன்றுபிரி காராவின் துயருடைய
கொடிவினவக் கழற்கான் மைந்த..."

(அ) கன்றுபிரி காராவின் துயருடையவர் யார்?
(ஆ) கழற்கால் மைந்தன் எனக் குறிப்பிடப்பட்டவர் யார்?

(vi) ".....மானமே புரப்பத் தவனிமே லெவர்க்கும்
வரிசையுந் தேற்றமும் மரபும்"

(அ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள உயர் இலட்சியம் யாது?
(ஆ) இவ்விலட்சியத்துக்குரிய கதாப்பாத்திரம் எது?

[பக்.2 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

(vii) "இஞ்சால வாமகன் மையத்தத் தூக்கப் போறாக..."

(அ) இக்கூற்று யாரால், யாருக்குக் கூறப்பட்டது?
(ஆ) இங்கு இடம்பெற்றுள்ள பிறமொழிச் சொல் எது?

(viii) "...குணக்குன்றாய் உழைத்துண்ணும்
குல விளக்காம் மனிதன்..."

(அ) இப்பாடலடி இடம்பெற்றுள்ள கவிதை யாது?
(ஆ) இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள அணியை எழுதுக.

(ix) "இப்போ பகல் பொழுதுகளில் ஈத்திலைக் குப்பை மேட்டில் ஏறி நின்று..."

(அ) இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
(ஆ) ஈத்திலை என்றால் என்ன?

(x) "...தெய்வம் உணாவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ....."

(அ) இவ்வடிகள் தொல்காப்பியத்தின் எவ்வியலில் இடம்பெற்றுள்ளன?
(ஆ) 'மா' என்பதன் பொருள் யாது?

(20 புள்ளிகள்)

2. பின்வரும் செய்யுள் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(i) பங்கப் பழனத் துழுமுழவர்
பலவின் கனியைப் பறித்ததென்று
சங்கிட் டெறியக் குரங்கிளநீர்
தனைக் கொண்டெறியும் தமிழ்நாடா
கொங்கர்க் கமரா பதியளித்த
கோவே யிராச குலதிலகா
வெங்கட் பிறைக்குங் கரும்பிறைக்கும்
மெலிந்தப் பிறைக்கும் விழிவேலே

(அ) இப்பாடலில் குறிப்பிடப்படும் நாட்டுவளங்கள் எவை?
(ஆ) பிறை என்ற சொல் குறிக்கும் மூன்று பொருள்களும் எவை?

(ii) சுற்றத்தார் தேவரொடுந் தொழ நின்ற
கோசலையைத் தொழுது நோக்கி
கொற்றத் தார்க் குரிசிலிவ ராரென்று?
குகன் வினவக் கோக்கள் வைகு
முற்றத்தான் முதற்தேவி மூன்றுலகு
மீன்றானை முன்னீன்றானை
பெற்றத்தாற் பெருஞ் செல்வம் யான் பிறத்த
லாற்றுறந்த பெரியா ளென்றான்

(அ) தசரதன் இப்பாடலில் எவ்வாறு சிறப்பிக்கப்பட்டுள்ளான்?
(ஆ) பின்வரும் தொடர் குறிப்பிடப்படுபவர்கள் யாவர்?
1. மூன்றுலகும் ஈன்றான்
2. முன் ஈன்றான்-

[பக்.3 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



(iii) கூட்டிற் பசுங்கிளிபோற் கோதையரை யெப்பொழுதும்
வீட்டிலடைத்து வைக்கும் விரகிலருக் கியாதுரைப்போம்
பூட்டித் திறந்தெடுக்கும் பொருளாகக் கருதினரோ
கேட்டோர் நகைப்பதுவுங் கேட்டிலரோ பைங்கிளியே
கிஞ்சுகவாய்ப் பைந்தொடிபாற் கிளத்தாய் பசுங்கிளியே.

(அ) இப்பாடலில் பெண்குறித்த ஆணின் நிலைப்பாடுகள் எவை?
(ஆ) இப்பாடலில் கையாளப்பட்டுள்ள உவமையணிகளை எழுதுக?

(iv) அருணந்தி சிவாச்சாரியார் ஒரு பெரியமகான். அவருக்கு ஒரு வகை வயிற்றுவலி இருந்தது. அவர் அந்த வலியை மாற்றாமல் தமது பிராரத்தம் என்று கருதி அதை அனுபவித்துக் கொண்டு வந்தார். மாணவர்களுக்குப் பாடஞ் சொல்கிறபோது மாத்திரம் அவர் தமது வலியை அங்கவஸ்திரத்தில், ஆவாகனம் பண்ணிப் பக்கத்தில் வைத்துவிட்டுப் பாடம் சொல்வது வழக்கம்.

(அ) இப்பகுதியினூடாக ஆசிரியர் கூற விழைந்த விடயம் யாது?
(ஆ) பின்வரும் சொற்களுக்குப் பொருள் எழுதுக.

1. பிராரத்தம்  2. ஆவாகனம்

(v) "இதில் பல ரகஸ்யப் பாதைகளை என் மகனே கண்டு பிடித்துக் கொடுத்தான். நான் முன்பே அவற்றை அறிந்திருந்தது போல ஓர் அலட்சியத்துடன் ஏற்றுக்கொண்டேன். எப்படி நகல் எடுப்பது, கத்தரித்து ஒட்டுவது, தேடுவது, அழிப்பது எழுத்துக்களை பெரிதாக்குவது, சிறிதாக்குவது போன்ற நுணுக்கங்களை எல்லாம் தெரிந்து கொண்டேன்".

(அ) கணனி குறித்தான அறிவு இளைய சமுதாயத்திடம் அதிக இருப்பதை ஆசிரியர் எவ்வாறு புலப்படுத்த விழைகிறார்?
(ஆ) கணினியின் பயன்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(20 புள்ளிகள்)

3. குகப்படலத்தில்,

(அ) பரதன், இராமன், குகன் ஆகிய கதாபாத்திரங்களின் சிறப்புக்கள்
(ஆ) கைகேயின் சிறுமை
என்பன சித்திரிக்கப்படுமாற்றினை விளக்குக.

அல்லது

தத்தைவிடு தூது என்ற பாடப்பகுதியில்,

(அ) தலைவியின் எழில்நலம் புனைந்துரைக்கப்படுதல்
(ஆ) தலைவி மீது தலைவன் கொண்ட ஈடுபாடு
ஆகியவை புலப்படுமாற்றினை விளக்குக.

(15 புள்ளிகள்)

[பக்.4 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk

www.agaram.lk



4. இலட்சியமும் சமநோக்கும் என்ற கட்டுரையில்,

(அ) இலட்சிய வாழ்வின் முக்கியத்துவம்
(ஆ) இலக்கியங்கள் இலட்சியங்களை எடுத்துக்காட்டும் விதம்
என்பன சித்திரிக்கப்படுமாற்றினை விளக்குக.

அல்லது

மூத்தம்மா என்ற சிறுகதையில்,

(அ) காசீம் என்ற பாத்திரச் சித்திரிப்பு
(ஆ) கிராமிய வாழ்க்கைமுறை
என்பன புலப்படுத்தப்படுமாற்றை விளக்குக.

(15 புள்ளிகள்)

- 5,6,7 ஆகிய வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவுசெய்து விடை எழுதுக.

5. குற்றாலக் குறவஞ்சி மலைவளம் கூறும் பகுதியை அடிப்படையாகக் கொண்டு

(அ) வளச்சிறப்பு
(ஆ) பண்பாட்டம்சங்கள்
என்பவற்றை விளக்குக.

(10 புள்ளிகள்)

6. குழந்தையென எனது மனம் குதூகலிக்கும் என்ற கவிதையை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

(அ) இயற்கை வருணனை
(ஆ) மனித வாழ்வுக்கான படிப்பினைகள்.

(10 புள்ளிகள்)

7. கிருட்டிணன் தூதுச் சருக்கத்தில்,

(அ) கண்ணபிரானின் பெருமைகள்
(ஆ) தருமனின் குணப்பண்புகள்
என்பன சித்திரிக்கப்படுமாற்றினை விளக்குக.

(10 புள்ளிகள்)

***

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk